பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 05 2026 MONDAY 7 15 PM

ஆகாஷவாணி
(Tune)
செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அஸ்ஸாம் மாநில சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைத்துள்ளது. மேற்கு வங்கத்திலும் இக்கட்சி முன்னிலை வகிக்கிறது.
- தமிழகத்தில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற தனிப்பெரும் கட்சியாக தமிழக வெற்றிக்கழகம் உருவெடுத்துள்ளது.
- மேற்கு வங்கம், அஸ்ஸாம் மாநில தேர்தல் வெற்றிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழகத்தில் முதலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள தவெகவுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- பசுமை எரிசக்திக்கான அரியவகை தாதுக்களை வெட்டியெடுக்கும் ஆசிய - பசிபிக் மண்டல நாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் புதிய திட்டத்தை ஆசிய வளர்ச்சி வங்கி அறிவித்துள்ளது.
- ஹோர்முஸ் நீரிணை பகுதியை அமெரிக்கப்படைகள் நெருங்கும் முயற்சியில் ஈடுபட்டால் தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

>>> <<<

தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் அரசியலில் காலடி எடுத்து வைத்துள்ள நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் அதிக இடங்களில் முன்னிலை வகிக்கும் தனிக்கட்சியாக உருவெடுத்துள்ளது.

இருப்பினும் அந்த கட்சிக்கு ஆட்சி அமைப்பதற்கு தேவையான 118 இடங்களை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடைசியாக கிடைத்த தகவல்படி திரு. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் 22 இடங்களில் வெற்றி பெற்று 87 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

திமுக 8 இடங்களில் வெற்றி பெற்று 52 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

அ.இ.அ.தி.மு.க. 5 இடங்களில் வெற்றி பெற்று 39 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள பாமக 5 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கு வங்க மாநிலத்தில் மொத்தம் உள்ள 293 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில்ல 11 இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

பிஜேபி 9 இடங்களில் வெற்றி பெற்று 191 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. திரிணமுல் காங்கிரஸ் 2 இடங்களிலும் வெற்றி பெற்று 85 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

மேற்கு வங்கத்தை பொருத்தவரை அதிக இடங்களில் முன்னிலை வகிக்கும் பிஜேபிக்கு சாதகமான சூழ்நிலை தற்போதுள்ளது.

அஸ்ஸாம் மாநிலத்தில் ஆளும் பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் உள்ள 126 சட்டப்பேரவைத் தொகுதிகளில் அறுதிப்பெரும்பான்மை பெற 64 இடங்கள் பெற வேண்டிய சூழ்நிலையில் பிஜேபி 54 இடங்களில் வெற்றி பெற்று 28 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

காங்கிரஸ் 2 இடங்களில் வெற்றி பெற்று 17 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

அஸ்ஸாம் கன பரிஷத் 3 இடங்களில் வெற்றி பெற்று 7 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

கேரளம் மாநிலத்தில் அறுதிப்பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்க 71 இடங்கள் தேவைப்படும் நிலையில் காங்கிரஸ் 62 இடங்களில் வெற்றி பெற்று ஒரு இடத்தில் முன்னிலை வகிக்கிறது.

இந்த கூட்டணியில் உள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 20 இடங்களில் வெற்றி பெற்று 2 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

ஆளும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி 24 இடங்களில் வெற்றி பெற்று 2 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன், Dharmadam தொகுதியில் 19 ஆயிரத்து 247 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

கேரளம் மாநில பிஜேபி தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் சந்திரசேகர் 4 ஆயிரத்து 978 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் தலைவர் திரு. ரெங்கசாமி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புள்ளது.

புதுச்சேரி சட்டப்பேரவையில் உள்ள 30 இடங்களில் பெரும்பான்மை பெற 16 இடங்களில் வெற்றி பெற வேண்டிய சூழ்நிலையில் என்.ஆர். காங்கிரஸ் 9 இடங்களில் வெற்றி பெற்று 3 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி 3 இடங்களில் வெற்றி பெற்று ஒரு இடத்தில் முன்னிலை வகிக்கிறது.

இந்த சட்டப்பேரவைத் தேர்தலுடன் சில மாநிலங்களில் காலியாக இருந்த இடங்களுக்கான இடைத்தேர்தலும் நடைபெற்றது.

குஜராத் மாநிலத்தில் உள்ள Umrith சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் திரு. ஹர்ஷத் பார்மர் வெற்றி பெற்றுள்ளார்.

கர்நாடகாவில் பாகல்ஹோட்டில் காங்கிரஸ் வேட்பாளர் உமேஷ் மேத்தி வெற்றி பெற்றுள்ளார்.

தேவானாகரி தொகுதியில் காங்கிரசின் சம்ரத் மல்லிகார்ஜூனா வென்றுள்ளார்.

மஹாராஷ்டிராவில் பாராமதியில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சுனித்ரா அஜித்பவாரும், ரகுரி தொகுதியில் பிஜேபியின் அக்ஷய் சிவாஜிராவும் வெற்றி பெற்றுள்ளனர்.

நாகாலாந்தில் Kogidang-ல் பிஜேபியின் Daochier Imchen வெற்றி பெற்றுள்ளார்.

திரிபுராவின் தர்மாநகரில் பிஜேபியின் ஜாகர் சக்ரபோர்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

>>> <<<

மேற்கு வங்க மாநிலத்தில் மாபெரும் வெற்றி மற்றும் அஸ்ஸாமில் மீண்டும் ஆட்சியைமக்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் முதன்முதலாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றி கழகத்திற்கும் பிரதமர் தனது சமூக வலைதள பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கேரளத்தில் ஐக்கிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு தங்கள் கூட்டணி தொலைநோக்கு பார்வையுடன் செயல்படும் என்றும், தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

>>> <<<

பசுமை எரிசக்தி உற்பத்திக்கு தேவையான அரியவகை தாதுக்களை வெட்டியெடுக்கும் ஆசிய - பசிபிக் மண்டலத்தில் உள்ள நாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் புதிய திட்டத்தை ஆசிய வளர்ச்சி வங்கி தொடங்கியுள்ளது.

தூய்மை எரிசக்திக்கான பேட்டரிகள், மின்சார வாகனங்கள் மற்றும் மின்னணு தொழில் நுட்பத்திற்கு தேவையான அரியவகை தாதுக்களை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு இது உதவிகரமாக இருக்கும் என்று ஆசிய வளர்ச்சி வங்கி தெரிவித்துள்ளது.

கச்சா எண்ணெய்க்கு மாற்றாகவும் தூய்மையான எரிசக்தியை அதிகளவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வகையில் இந்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அரிய வகை தாதுக்களுக்கான கட்டமைப்புகளை மேற்கொள்வது, கொள்கை ரீதியிலான சீர்திருத்தங்களுக்கு உதவுவது, முதலீடுகள் ஆகியவை ஊக்குவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் நாடுகளில் மின்சார வாகன உற்பத்தி துறையில் மாற்றங்களை கொண்டு வர இந்த நிதி பெரிதும் பயன்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>> <<<

தீ விபத்துகளில் இருந்து உடலை பாதுகாப்பது மற்றும் அதற்கான மருத்துவ வசதிகள் குறித்த தகவல்களை மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கில் மத்திய சுகாதார அமைச்சகம் இன்று தீ பாதுகாப்பு விழிப்புணர்வு வாரத்தை தொடங்கியுள்ளது.

புதுதில்லியில் இன்று மத்திய சுகாதார செயலர் திருமதி. புன்யா ஸ்ரீவத்சவா தீ பாதுகாப்பு உறுதிமொழியை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செய்து வைத்து பேசினார்.

பாதுகாப்பான பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் விழிப்புணர்வு கொண்ட மக்கள் ஒன்றிணைந்து தீயில் இருந்து தற்காத்துக் கொள்வது என்பது இந்த வாரத்தின் கருப்பொருள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த பொறுப்புணர்வுடன் தீ பாதுகாப்பு நடவடிக்கைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தீ பாதுகாப்பு வாரத்தை ஒட்டி நாடு முழுவதிலும் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

விழிப்புணர்வு முகாம்கள், தீ தடுப்பு செயல் விளக்கங்கள் உள்ளிட்ட பணிகள் இம்மாதம் 10ம் தேதி வரை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அவர் தெரிவித்தார்.

அன்றைய தினம் தீயில் இருந்து உயிரை பாதுகாப்பது மற்றும் மருத்துவ வசதிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும் என்றும் திருமதி. புன்யா ஸ்ரீவத்சவா தெரிவித்தார்.

>>> <<<

அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள பயணியர் கப்பலில் உள்ளவர்களுக்கு Handa Virus நோய் தாக்குதல் உறுதி செய்யப்பட்டு இருப்பதையடுத்து நோய் பரவலை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் Handa Virus தாக்குதலால் மூன்று பேர் உயிரிழந்து இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் சிலருக்கு பாதிப்பு அறிகுறி உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கப்பலில் உள்ளவர்கள் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் Handa Virus தாக்குதல் சிலருக்கு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவில் உள்ள ஜோகன்னஸ்பர்கில் உள்ள மருத்துவமைனையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அதில் 3 பேர் உயிரிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Handa Virus பாதிக்கப்பட்ட நோயாளிகளிடம் இருந்து சிறுநீர் மற்றும் எச்சில் மூலமாக நோய் பரவக்கூடும் என்பதால் அது குறித்த முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*இந்த வைரசால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சுத்திணறல் மற்றும் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்படும் என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.*

*>>> <<<*

*ஹோர்முஸ் நீரிணை பகுதியை அமெரிக்கப்படைகள் நெருங்கும் முயற்சியில் ஈடுபட்டால் தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.*

*இதுதொடர்பாக ஈரானின் மத்திய அரசு செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஹோர்முஸ் நீரிணைப்பகுதியில் கப்பல்கள், தடையின்றி பயணிப்பது உறுதி செய்யப்படும் என்றும், அமெரிக்கப் படையோ அல்லது வேறு எந்த நாட்டின் படையோ தேவையின்றி அந்த பகுதிக்குள் நுழைய முற்பட்டால் உடனடியாக தாக்குதல் நடத்தப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பயணியர் கப்பல் போக்குவரத்து எவ்வித பாதிப்புமின்றி நடைபெறுவதை ஈரான் உறுதி செய்யும் என்றும் கூறப்பட்டுள்ளது.*

*>>> <<<*

*யுக்ரைனின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள Merefa நகரில் ரஷ்யா நடத்தி ஏவுகணைத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்.*

*இத்தகவலை தெரிவித்த கார்கிவ் மாகாணத்தின் ஆளுநர், இந்த தாக்குதலில் 3 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் உயிரிழந்ததாக தெரிவித்தார்.*

*பத்துக்கும் மேற்பட்ட வீடுகள், வணிக நிறுவனங்கள், 4 கடைகள், கார் பழுது நீக்கும் கூடம், ஒரு உணவகம் ஆகியவை சேதப்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.*

*நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணையை ரஷ்யா பயன்படுத்தி உள்ளதாக யுக்ரைன் நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*இருப்பினும் இதுகுறித்து ரஷ்ய தரப்பில் இருந்து எந்த ஒரு செய்தியும் வெளியாகவில்லை.*

*>>> end<<<*